காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

5 34

காஞ்சி
வாசகர்களுக்கு
பேரறிஞர் அண்ணா அவர்கள் இதுவரை எழுதிய கதைகள் கட்டுரைகள் அனைத்தும் 16–3–69 முதல் "காஞ்சி" இதழில் தொடர்ந்து வெளியிடப்படவிருக்கின்றன.
16-3-69 இதழில், பேரறிஞர் அண்ணா அவர்கள், கழகச் செயல் வீரர் ஒருவரது மறைவு குறித்து எழுதிய
'வேதனை வெள்ளம்'
என்ற தப்பிக்கு மடல் வெளிவருகிறது!
விற்பனையாளர்கள் தங்கள் தேவைக்கு முன்னதாகவே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
உரிமையாளர்.
"காஞ்சி"
காஞ்சிபுரம்-3
பாடசாலை
நியாய விலைக் கடை

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 9—3—69 | இதழ் 34

மாநில, மத்திய பட்ஜெட்டுகள்

கடந்த கிழமை இறுதியில் தமிழக அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கையும், மத்திய அரசாங்கத்தின் நிதி நிலை அறிக்கையும் முறையே சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசின் நிதி அறிக்கையில், வருவாய் கணக்கில் ரூ. 268·66 கோடியும், செலவுக் கணக்கில் ரூ. 285 37 கோடியும் என்று குறிப்பிட்டு, ரூ. 16·71 கோடி துண்டு விழும் இந்த தொகையை ஈடுகட்ட, புதிய வரி இனங்கள் எதுவும் புகுத்தப்படாததுடன், ஈடுகட்டுவதற்கான எந்த வழியினையும் எடுத்துக்காட்டாமலும் விட்டு, மத்திய அரசிடமிருந்து பெறும் அதிக உதவி மூலம் சரிக்கட்டிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினை மட்டும் வெளியிடப்பட்டிருக்கிறது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கடந்த பட்ஜெட் வாசிப்பின்போது, தமிழக மக்கள் இனி எந்தவொரு வரியையும் தாங்கும் சக்தி படைத்தவர்களாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளதுபோல, உண்மை நிலையை மனதில் கொண்டு, புதிய வரிகள் எதுவும் இப்போது போடாதது வரவேற்கத்தக்கதாகும்.

ஆனால், அதே வேளையில் செலவினங்களின் பெருக்கம் புதிய கவலையையும் தோற்றுவித்திருக்கிறது என்பதனைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

கல்லூரிகளில் புகுமுக வகுப்புக்கு மாணவர்களுக்கு எந்த அடிப்படையிலும் கட்டணம் வசூலிப்பதில்லை என்ற அரசின் முடிவு நிச்சயம் செலவினத்தை மிகுதிப்படுத்தக்கூடிய ஒன்றாகும். இதேபோல் பாலிடெக்னிக் பள்ளிகளின் முதலாண்டு மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்று யோசனை செய்து கொண்டிருப்பதும்கூட செலவுப்பெருக்க யோசனையே யாகும்.

இவையல்லாமல் தொழில்துறை நிலைமைகள், காரணமாக பஞ்சாலைச் சிக்கலின் நிவாரணத்துக்கும் சிலவகை மின் கட்டணச் சலுகைகளும், அரசுக்குச் செலவுப் பளுவைக் கூட்டக் கூடியதாகும்.

புகுமுக வகுப்புக்கு முழுதுமாகக் கல்விச் சலுகை என்பது இன்னும் நன்கு சிந்தித்துச்செயல் பட்டிருக்க வேண்டும் என்றே நாம் கருதுகிறோம். கல்லூரிக் கட்டத்தை எட்டுகின்ற பெரும்பாலோர் வாய்ப்பு வசதிகள் படைத்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. சிறுபான்மையினரே வசதியற்றோர்.

வசதியற்றோர் இன்னும் உணர்வு பூர்வமாகவும், ஆக்க ரீதியாகவும் கல்லூரிப் படிப்புக்கு வழிகாணும் வகையில் யோசனை செய்திருக்கலாம். அதோடு இலவசக் கல்லூரிக் கல்வித் திட்டத்தின் மூலம், எப்படியும் அரசு எதிர்பார்ப்பதைப்போல ஏழை எளியவர்கள் பயன்பெறும் பாதையை விரிவாகத் திறந்துவிடாது; மாறாக பாதையை அடைக்கவே செய்யும்.

எந்தக் கட்டத்திலும், வாய்ப்பு வசதி படைத்தோர் எல்லாவகை முயற்சிகளாலும் இடத்தைப் பிடிக்கவே முயலுவர். முக்கியஸ்தர்களது பரிந்துரைகள்கூட சமத்துவ நிலையில் கிடைக்கும் என்று பொதுவாக எதிர்பார்க்கும் நிலைமை எங்கும் காணப்படவில்லை. எனவே ஏழை எளிய மாணவர்கள் எப்படியும் இடம் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டே தீரும்.

எல்லோருக்கும் இலவசக் கல்வி இல்லாத நிலையிலேயே கல்லூரிகளில் குறிப்பாக புகுமுக வகுப்புக்கு இடம் கிடைப்பதில்லை என்ற குற்றச் சாட்டு பரவலாக இருக்கிறது. இப்படியொரு வாய்ப்பு பெருகும்போது, இந்த இடப் பிரச்னை இன்னும் மிகக்கூடும்.

தமிழக அரசும், சென்னைப் பல்கலைக் கழகமும் இது விஷயத்தில் இணைந்து, மாணவர்களது தகுதியை இன்னும் வலிவானதாக நிர்ணயித்தால், ஒருகால் அரசின் வேட்கை, ஈடேறக்கூடும்.

இதுபோன்றே பிற இனங்களின்மீதும் அரசு கண்ணோட்டம் வரவேற்கக் கூடியதும் ஆராயப்பட வேண்டியதுமாகும். விவசாயப் பிரச்னையில் வானம் பொய்த்தால்கூட சாகுபடி தடைபடாது; விளைவு குன்றாது என்கிற நிலைமையைத் தோற்றுவிப்பதனை இலட்சியமாக அறிவித்திருப்பது மிகமிகப் பாராட்டத்தக்கதாகும். துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாகும்.

மொத்தத்தில் நாட்டு மக்களது நல்வாழ்வு மீதும், தொழில் துறையின் வளர்ச்சி மீதும் முழு அக்கறை கொண்டுள்ளது தமிழக அரசு என்பதனை, இந்த நிதி அறிக்கை மூலம் திட்டவட்டமாக உணர முடிகிறது.

தமிழக அரசு, நாட்டு மக்கள்மீது எந்த அளவுக்கு அக்கறையோடு பட்ஜெட் தயாரித்திருக்கிறதோ, அந்த அக்கறையினையும், பயன்களையும் பாழ்படுத்தக்கூடிய அளவுக்கு மத்திய அரசின் பட்ஜெட் வெளியாகி இருக்கிறது.

நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய், இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்திலேயே நிதி அறிக்கை தயாரித்திருக்கிறார் என்பதனை நம்ப முடியவில்லை.

மத்திய அரசு, பட்ஜெட் தாக்கல் செய்யப் போகிறது என்ற நிலைமை ஏற்படும் போதெல்லாம் நாட்டு மக்கள் ஏதோ ஒரு துக்ககரமான சம்பவம் நிகழவிருப்பது போன்ற உணர்வுக்கு ஆளாகவே செய்கிறார்கள்.

நாடெங்கும் பரவலாக பருவ மழை பொய்த்திருப்பதன் காரணமாக பஞ்சநிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதனைச் சமாளித்துத் தீரவேண்டியவர்கள், மாநில அரசுகள்தானே என்ற எண்ணத்தில், திட்டங்களைத் தீட்டிக்கொண்டே போகும் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்த எண்ணத் தடிப்பிலேதான் மொரார்ஜி தேசாய் ரசாயன உரவகைகளுக்கும், பம்பு செட்டுகளுக்கும் வரியைக் கூட்டிக் காட்டி, அற்ப வருவாயை எடுத்துக் காட்டி இருக்கிறார்.

தமிழக அரசு, தன் சக்தி முழுவதையும் திரட்டி, உணவுப் பிரச்னையில் முழுக் கவனம் செலுத்திக்

[14-ம் பக்கம் பார்க்க]

இருதயத்தில் ஓர் ரோஜா

முல்லை. சக்தி

அந்தப் பெரும் மண்டபத்தில் ஆனந்த் தனி மரம்போல் நின்றான். நிலை குலைந்துப் போயிருந்த அவனை, ராஜுவின் விசும்பல் ஒலி, சுயநினைவுக்குத் திருப்பி அழைத்து வந்தது! அருகிலே அமர்ந்து அருவிபோல் விழிகளிலே கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருந்த தன் நண்பனை ஒருகணம் ஆனந்த் பார்த்தான். அவனது இதழ்களில், கார்முகிலைக்கிழித்துக்கொண்டு நெளிந்தோடும் மின்னலைப்போல, ஒரு புன்னகை தோன்றி மறைந்தது!

"ராஜு! ராஜு......நீ ஏன் அழுகிறாய்? அழவேண்டிய நானே சிரித்துக்கொண்டிருக்கும்போது, நீ எதற்காக அழவேண்டும் என்றான் ஆனந்த்.

ஏறிட்டுப் பார்த்தான் ராஜு. அவனது நீர்வீழ்ச்சிக் கண்களில் ஏக்கமும் துக்கமும் போட்டிப் போட்டுக்கொண்டிருந்தன!

"வாழ்நாளெல்லாம் சிரித்துக் கொண்டே இருக்கவேண்டும், தென்றலில் சிரிக்கும் மலர்களைப்போல! என்று சொல்லிக்கொண்டிருக்கும் நீயா அழுவது!"

"என்னைக் கொல்லாதே! ஆனந்த்! என்னை வார்த்தைகளால் கொல்லாதே! நான் வாழ்நாளெல்லாம் அழுதுகொண்டே, இருக்கும் அளவிற்கு எனக்குப் பெரும் தண்டனைக் கொடுத்துவிட்டாய்! மரணதேவதை என்னை அணைக்கும்வரை நான் சிரிக்கக் கூடாதென்று கடுந்தண்டனை விதித்து விட்டாயே! என் மகிழ்ச்சி—என் ஆனந்தம்—என் சிரிப்பு எல்லாவற்றையுமே பறித்துக் கொண்டாயே! நான் உனக்கு என்னடா தவறு செய்தேன்?"

"இப்போது என்ன நடந்து விட்டது!"

"நடக்கக்கூடாதது நடந்துவிட்டது! எதிர்பாராதது நடந்து முடிந்துவிட்டது! கண்ணீரை எனக்கு நிரந்தரக் காணிக்கையாக்கிவிட்டு நீ சிரிக்கிறாய்...என் இதயம் எப்படி அழுகிறது என்பது உனக்குப் புரியவில்லையா ஆனந்த்!

"நடந்த நிகழ்ச்சிகள் உதிர்ந்த சருகுகள்! அது காலப்போக்கில் மங்கி மறைந்து விடும்!"

"இன்று நடந்த நிகழ்ச்சி சருகல்ல...என் இருதயத்தில் விழுந்த வெட்டுக்காயம். அந்தப் புண் ஆருது... மறையாது...காலதேவனின் கரங்களுக்கும் அதனை ஆற்றும் ஆற்றலோ, திறமையோ இல்லை..."

"இரவும், பகலும் போல நமது வாழ்வில் இன்பத்தையும், துன்பத்தையும் நாம் சந்தித்துதான் தீர வேண்டும். இன்பத்தைக் கண்டு பல்லிளிக்காமலும், துன்பத்தைக் கண்டு வேதனையுருமலும் இருப்பதுதான் வாழ்க்கையின் இரகசியம்!"

"தத்துவ சொற்களால் துன்பங்களை மறந்துவிடலாமென்று நீ நினைத்தால் உலகத்தில் எங்குமே அழுகுரல் கேட்காது; புலம்பல் ஒலி எழாது! கண்ணீர் வெள்ளம் ஓடாது!"

"கண்ணீர் வடிப்பதால் நடந்து முடிந்த சோக நிகழ்ச்சி மாறிவிடுமா...!"

"அந்தசக்தி மட்டும் கண்ணீருக்கு இருக்குமானல் மாண்டவர்கள் மீண்டும் எழுவரே! கண்ணீருக்கு கவலையைக் கரைக்கும் சக்தி மட்டும்தானே இருக்கிறது!"

"அப்படி என்ருல் அழு; ஆனல் அழுமுன் எதற்காக அழுகிருய் என்பதைச் சொல்லி விட்டு அழு!"

"ஆனந்த்! நான் அழுவதின் காரணம் உனக்குத் தெரியாதா! எனது கண்ணீர் உனக்கு சொல்லவில்லையா, எனது வேதனைக் காவியத்தை......! புரியவில்லையா எனது சோகக்கதை!...மாணவ மணிகளிலே மாணிக்கம் போல் வீற்றிருந்த நீ இன்று புழுதியிலே எறியப்பட்டாயே...கல்லூரி மண்டபத்திலே மன்னன் போல் அமர்ந்திருந்த உன்னை, வெளியே துரத்தினர்களே...அது போதாதா...என் அழுகைக்குக் காரணம் ...என் கண்ணீருக்கு விளக்கம்!"

"அது நான் செய்ததவறுக்கு எனக்குக் கிடைத்த தண்டனை. குற்றம் புரிந்தவர்கள் தண்டனையை அனுபவித்துதான் தீரவேண்டும்"

"உண்மைதான்! ஆனல் குற்றவாளி யார்?"

"ஏன் நான்தான்......அதில் உனக்குச் சந்தேகமென்ன..."

"ஆனந்த்! பிரின்சிபாலை ஏமாற்றலாம்...மாணவர்களை ஏமாற்றலாம்......ஆனல் என்னை ஏமாற்ற முடியாது!......

"நான் யாரையும் ஏமாற்றவில்லை."

"உலகம் ஏற்றுக்கொள்ளும்...ஆனல் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்..."

"ஏன்..."

"ஏனு...உன் இதயத்தைக் கேள் பதில் சொல்லும்......"

"நான் செய்தது சரியே என்றுதான் என் இருதயமும் கூறுகிறது!"

"ஆனல் என் இருதயம் கூறுகிறது, நீ குற்றவாளி அல்ல என்று!"

"ஏன்...எப்படி?"

"ஆனந்த்! குற்றவாளி நானிருக்க........குடித்துவிட்டுக் கும்மாளம் போட்ட நான் குத்துக்கல் மாதிரி அமர்ந்திருக்க—நீ எப்படிக் குற்றவாளி ஆகமுடியும்"... எதற்காக நீ செய்யாத குற்றத்தை ஏற்றுக் கொண்டாய்...? சொல் ஆனந்த்...சொல்..."

"சொல்கிறேன் ராஜு...சொல்கிறேன்...உன்னைக் காப்பாற்ற...என் நண்பனைக் காப்பாற்ற...நீ குற்றவாளி என்று தெரிந்திருந்தால் தண்டனை இதனைவிடக் கடுமையாக இருந்திருக்கும்!"

"என்னைக் காப்பாற்ற நீ இத்தனைத் தியாகம் செய்வதா? உன் பெயருக்குக் களங்கம் சேர்ப்பித்துக் கொள்வதா? உன் வாழ்க்கையையே பாழ்படுத்திக் கொள்வதா?"

"ஒன்றின் அழிவில்தான் மற்ருென்று உதயமாகிறது! இரவின் அழிவில்தான் பகல் முளைக்கிறது! மெழுக்குவர்த்தியின் அழிவில்தான் ஒளி எழுகிறது!"

"அது மெழுகுவர்த்திக்குப் பெருமையாக இருக்கலாம்...ஆனால் எனக்கு..."

"உனக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்...இனி இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்கட்டும்... மதுக் கோப்பையும், மங்கையரின் மோகமும் உன்னை அணுகாமல் இருக்கட்டும்! நீ திருந்திவிட்டால், நான் அனுபவிக்கும் இந்தத் தண்டனை மிக மிகச் சாதாரணமானது! நான் பெறும் பரிசாக இருக்கும்!"

"ஆனந்த்! இந்தத் தண்டனையை ஏற்றுக்கொண்டு தான் என்னை நீ திருத்த வேண்டுமா...?" என் வாழ்வை வளமாக்க நீ இவ்வளவு பெரும் விலையைக் கொடுக்கத் தான் வேண்டுமா...?

"ஒரு பொருளின் விலை அதனின் தேவையைப் பொறுத்துதான் உயர்கிறது...தாழ்கிறது. உனக்கு நான் இந்த விலையைக் கொக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது! அதை நான் பெரும் பாக்கியமாக—என் வாழ்க்கையில் கிடைத்த உன்னத சந்தர்ப்பமாக நான் கருதுகிறேன்..."

"நண்பன் என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுப்பவனே...இனி நான் மதுவைத் தொடேன்...மங்கையரிடம் தகாத முறையில் நடந்து கொள்ளமாட்டேன்... இந்த நிகழ்ச்சியை நான் வாழ்நாள் முழுவதுமே மறக்க மாட்டேன்...!

"அதுபோதும் ராஜு...அதுபோதும்..."

"ஆனந்த் இன்னும் ஒன்று எனக்குப் புதிராகவே இருக்கிறது... அந்தப் பேனா......உன்னுடைய பேனா... அங்கே எப்படி வந்தது...!"

"அது ஒரு தனிக் கதை; காலம் வரும்போது அதனை உனக்குச் சொல்கிறேன்"

"கல்லூரி–படிப்பு–படுக்கை" என்ற கோட்டினுள் அடங்கிவிடும் உன் வாழ்க்கையிலும் கதையா?..."

"ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஒரு கதைதான்! ஒவ்வொரு மனிதனும் தனது வாழ் நாளில் சந்திக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உன்னத கதையாகத்தான் இருக்கும் ஆனால் எல்லோராலும் அவைகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்க முடிவதில்லை. அதனால்தான் பல இலக்கியங்கள் உருவாவதில்லை! அதுபோல என் வாழ்க்கையிலும் ஒரு சின்னஞ்சிறு கதை!

"அந்தக் கதையின் கதாநாயகன் நீ... கதாநாயகி யாரோ!"

"என் கதையில் கதாநாயகி இல்லை"

"அப்படியா!"

"ஆம் இது ஒரு புதுமையான கதை; புரட்சிகரமானக் கதையும் கூட!"

"சரி...சரி... ஆவலைத்தூண்டாதே!" என்றபடியே ராஜு எழுந்தான்! இருவரும் கை கோர்த்த வண்ணம் அந்த மண்டபத்தைவிட்டு வெளியேறினர்!

ஆனால் ராஜுவின் மனம் மட்டும் அது என்ன கதை என்று எண்ணமிட்டுக்கொண்டே இருந்தது!

With the best compliments from:

Venkateswara Engineering Contractor

POLLACHI.

வருந்துகிறோம் வாரியாருக்காக!

[புலவர் கோ. அண்ணாமலை]

பேச்சுரிமை மிகுந்த நாடு இது. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம்; எப்போது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பது உண்மைதான்!

ஆனால் யாரும் உண்மைக்குப் புறம்பானவைகளைப் பேசுவது நல்லதல்ல என்பதையும் பேசுவோர் உணர்ந்திருக்க வேண்டும். அப்படி ஒருவர் உண்மைக்குப் புறம்பானவைகளைப் பேசும்போது இவைகள் உண்மைகளல்ல என்று எடுத்துரைப்பது மறுத்துரைப்பது—ஆம். மறுத்துரைப்பது மட்டும்தான் அவ்வாறு உரைக்கக் கருதுவோரின் கடமையாக இருக்கவேண்டுமேயன்றி 'கையை நீட்டுவது' கண்டிக்கத்தக்கது.

இது பொது உண்மை.

வாரியார் எதைப் பேசியிருந்தாலும் அவர் இதைப் பேசினார் என்பதற்காக யாராவது அவரை அடித்திருந்தால் அவர் உடைமைகளை உடைத்திருந்தால் அவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள் மட்டுமல்ல, குற்றம் நிருவப்பட்டுவிட்டால் தண்டிக்கத் தக்கவர்களும் ஆவர்.

இனி, வாரியார் கருத்துக்கும் பேச்சுக்கும் வருவோம்.

தெய்வத்திடம் நம்பிக்கை இல்லை என்பதால் அண்ணா இறந்துவிட்டார் என்றும் விபூதியை வீசி எறிந்ததால் திரு. நெடுஞ்செழியன் அமைச்சர் பதவியைக்கூட இழந்தார் என்பதும் அவர் பேச்சின் சாரம்.

திரு. நெடுஞ்செழியன் தன்னைப் பற்றிய பேச்சுக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார். எனவே நாம் அது பற்றி விளக்க வேண்டாம்.

சிதம்பரம் கோயிலுக்குப் போய் விபூதியை வீசியெறிவதால் அமைச்சர் பதவி போய்விடும் என்றால் கோயிலுக்கே போகாத திரு. கருணாநிதி மட்டும் எப்படி முதலமைச்சர் ஆக முடிந்தது என்பதை வாரியார் விளக்கியிருக்க வேண்டும். விளக்கவில்லை. விட்டுவிட்டார். நாமும் அத்துடன் விட்டுவிடுவோம்.

அண்ணா இன்று நேற்றல்ல பல்லாண்டுக் காலமாக, குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், வாரியார் காலட்சேப உலகில் 'காலூன்றிக்' கொள்வதற்கு முன்பிருந்தே 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலரின் திருவாக்கிலே நம்பிக்கைக்கொண்டிருந்தவர் என்பதையும் அந்த அமுத மொழியைத் தமிழகமெங்கும் பரப்பி வந்தவர் என்பதையும் இந்த நாடு ஒத்துக்கொண்டிருக்கிறது.

தெய்வத்தின் பெயரால் நடத்தப்படும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மூடப் பழக்க வழக்கங்களையும்தான் அண்ணா தன்னாலான மட்டும் சாடினார். மக்கள் மூடநம்பிக்கையின் வலுவான முரட்டுப் பிடியிலிருந்து தப்பி உண்மையான கடவுள் நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பினார்.

நேருக்கு நேராக அவரைச் சிகாகோவிலிருந்து வந்த ஒரு பத்திரிகை நிருபர், ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்பு கேட்டார்; 'நீங்கள் கடவுள் நம்பிக்கை யற்றவரா? நீங்கள் கடவுள் ஒருவர் உண்டு என்பதை நம்பவில்லையா?' என்று!

அண்ணா, நம்முடைய "'ஆற்றலை மீறிய ஒரு ஆற்றல், நம்முடைய சக்திக்கெல்லாம் மேற்பட்ட ஒரு சக்தி இருப்பதை ஒப்புகிறேன். ஆனால் கடவுளை வைத்து எழுப்பப்பட்ட மதச் சடங்கு சம்பிரதாயங்களைத்தான் எதிர்க்கிறேன்'' என்று பதிலளித்தார். அப்போது அவர் சென்னை சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் ஒரு உறுப்பினர். எதிர்க்கட்சித் தலைவர் இராமசாமி முதலியார்.

எனவே வாரியார் அண்ணாவைக் கடவுள் நம்பிக்கையற்றவர் என்றது, உண்மைக்குப் புறம்பானது. தன்னுடைய பேச்சுரிமைக்குத் தானாகவே பங்கம் விளைவித்துக் கொண்ட செயல்! அண்ணாவைப் பற்றிச் சரியாக அறியாமை!

அது மட்டுமல்ல. அண்ணா உடல் நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்தபோது தமிழகத்தில், அவர் நலம்பெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொள்ளாத கோயில்கள், மசூதிகள், மாதா கோயில்கள் எவையும் இல்லை என்றே சொல்லிவிடலாம். கவர்னர் உஜ்ஜல்சிங் வணங்கும் சீக்கியர் கோயில் முதல் வாரியார் வணங்கும் முருகனுடைய திருத்தலங்கள் உள்பட எல்லாக் கோயில்களிலும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. எல்லா மக்களும் கட்சி, மத, பண, இன வேறுபாடுகள் இல்லாமல் கடவுளை வணங்கினர்.

இத்தனைப் பேர்களில் வாரியாரும் ஒருவராக இருந்திருப்பார் என்பதுதான் நம்முடைய நம்பிக்கை.

இவர் தன் முருகனை வேண்டியதற்கு முருகன் என்ன பதில் சொன்னானோ நாம் அறிவதற்கில்லை.

முதலில் வாரியாரை நாம் ஒன்று கேட்டுவிட விரும்புகிறோம்.

தெய்வபக்தி யுள்ளவர்கள் எத்தனைப் பேர் இன்னும் சாகாமல் இருந்துவருகிறார்கள்?

என்றும் பதினாறு என்று வரம் பெற்ற மார்க்கண்டேயன் வாரியார் வீட்டிலேதான் குடித்தனம் இருக்கிறானா?

நித்த நித்தம் சடங்கு சம்பிரதாயங்களுடன் கோயிலுக்குப் போய் வணங்கினால்தான் அவன் கடவுள் நம்பிக்கையுடையவன்; இல்லையென்றால் இல்லை என்று வாரியார் எண்ணுகிறாரா? அப்படியானால் வருந்துகிறோம்—வாரியாருக்காக!

(10-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜனவரி மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித்தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.

'காஞ்சி.'

[மா. கி. தசரதன்]

'நீ என்ன எழுதுகிருய்?' ஒவ்வொருமுறையும் மலர் வெளிவரும்போதுஎல்லாம் இந்தக் கேள்வியும் என்னை நோக்கி வரும். என்னவாவது சொல்வேன். "அது வேண்டாம்; இதை எழுது" என்ரே "சரி எழுது" என்ரே கட்டளை பிறக்கும். இந்தப் பொங்கலுக்குச் சில நாட்கள் முன்னர் ஒருநாள். அதே கேள்வி "மலருக்கு நீ என்ன எழுதியிருக்கிருய்?" என்று. "அளவு அறிதல் என்று அடிக்கடி சொல்வீர்களே அதைக் கருத்தாகக்கொண்டு 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்று தலைப்பிட்டு எழுதியிருக்கிறேன்" என்றேன்.

இப்படி எத்தனையோ முறை; கேட்டுக் கேட்டு எழுதியிருக்கிறேன்; சொல்லிச் சொல்லி எழுதியிருக்கிறேன். எழுதுவதற்குக் கரு சில முறை தரப்பட்டிருக்கிறது; எழுதியதற்குத் தலைப்பைப் பலமுறை பெற்றிருக்கிறேன்.

ஆனல் இன்ரே!! என்னத்தை எழுதுவது என்று திகைக்கிறேன்; எப்படி எழுதுவது என்று தெரியாமல் தயங்குகிறேன். நீட்டிய விரல் சுட்டிய திசையில் சென்று பழக்கப்பட்டுப்போன என் பேனமுனை இப்போது திசை தெரியாது குழம்புகின்றது.

'திக்குத் தெரியாத காட்டிலே' என்று பாடக் கேட்டது உண்டு. ஆனல் இன்றுதான் அந்த அடிக்குப் பொருள் புலப்படுகின்றது; உண்மையான பொருள் புலப்படுகிறது.

ஆயிரக்கணக்கான மாணவர்களின் எழுத்துக்களை எடை போட்டாகிவிட்டது. இன்ன இடத்தில் இன்னது தவறு—இது மரபு பிறழ்ந்த இடம்—இங்கே இலக்கணப் பிழை—இங்கே சொல் பொருந்தவில்லை—இப்பொருளை இன்னம் செப்பமுறச் செப்பலாம்—எங்கே பயிற்சி எண்? ஏன் எழுதும் நாள் குறிக்கவில்லை? என்று எத்தனை எத்தனையோ வகைகளில் என் மாணவர்தம் ஏடுகளை அலசி ஆய்ந்து அறிவுரை கூறியுள்ளேன்.

ஆனல் என் எழுத்தில் எதுகுறை? எங்குத் திருத்தம் தேவை என்று கேட்டுக்கொண்டது உண்டு; கேட்டுத் தெரிந்து கொண்டது உண்டு; தெரிந்து தெளிவு கொண்டது; தெளிந்து திருந்தியது உண்டு. கல்லூரி நாட்களில் மாணவனுக மதிப்புக்குரிய பெரும்பேராசிரிய மருத்துவர்பால் பெற்ற நல்லுரைகள், அறிவுரைகள், கருத்துரைகள் பல—மிகப்பல. அதற்குப்பின் நான் சேர்ந்த ஒரு 'பல்கலைக் கழகத்தில் பெற்ற பாடம் பெரிது; பெருமைக்குரியது.

ஏடும் எழுதுகோலும் எடுத்துச் சிற்றில் அமைத்துக் கோலமிட்டு மகிழ்ந்த நாட்கள் மனத்திரையில் அலை அலையாக எழுகின்றன.

* * *

எழுதவேண்டும் என்ற துடிப்பு—பதைப்பு. எதை எழுதுவது என்ற தெளிவுகூட இருக்காது. எதையாவது எழுதிட வேண்டும் என்ற 'அரிப்பு' மட்டும் இருக்கும். இலக்கியக் கடலின் மணல் நிறைந்த கரையில் ஒட்டையும் உடைசலுமாகக் கிடக்கும் கிளிஞ்சல் துண்டுகள் சிலவற்றைப்பொறுக்கிவைத்துக் கொண்டு விளையாடி மகிழும் சின்னஞ்சிறு முயற்சி; அச்சிலே பெயரைக் கண்ட குதூகலம்; இந்தச் சின்ன மகிழ்ச்சிக் கேணியில் குளித்து மகிழ்ந்த துணிவில் கண் எதிரில் கண்ட விபரீத வாழ்வு ஒன்றினைப் பூசியும் மெழுகியும் ஒரு கதையாக்கிவிட்டேன். ஆசை முன் சென்று வழிகாட்ட, வார்த்தெடுத்த சிற்பத்தினைத் தாங்கிச்சென்று 'திருமுன்' படைத்தேன். பத்தாறு நாட்கள் கழித்துப் பாராட்டுகள் கிடைத்தன. விண்ணிலே சிறகில்லாமலே பறந்தேன். ஆனல் அந்தக்கதைக்கு அப்போது பெயர்கூட இடவில்லை, என்ன பெயர் வைக்கலாம் என்று சிலநாள் சிந்தையில் குழப்பம். திடும் என ஒருநாள் "தசரதன்! உன் கதைக்குத் 'தணலில் தங்கம்' என்று பெயர்வைக்கலாம்" என்ற ஆணை வந்தது.

* * *

நான் முதலில் பெற்ற இலக்கியக் குழந்தைக்குத் 'தணலில் தங்கம்' என்ற பெயர்ப் பரிசு பெற்றேன். கடைசியாகப் பெற்ற வாரிசுக் குழந்தைக்குக் 'கார் வண்ணன்' என்றும் பெயர் கிடைத்தது.

* * *

ஒருநாள் நள்ளிரவுக்கு மேல் நேரம்அச்சகத்திலிருந்து தோழர் பஞ்சாட்சரம் வந்து கதவைத் தட்டி எழுப்பினர். கையிலே ஒரு காகிதம் இருந்தது, 'இதை உங்களிடம் காட்டச் சொன்னர்' என்று அதை நீட்டினர். வாங்கிப் படித்தேன். 'தணலில் தங்கம்' தொடர்கதையாக வரும் என்ற அறிவிப்பு—அது மட்டுமா? அதைப்பற்றிய வசீகரமான வருணனை வேறு! வேறு என்ன வேண்டும் எனக்கு!

நான் எழுதிய கதை தொடர் கதையாக வர இருக்கிறது!

எட்டடுக்கு மாடியில் என்னை ஏற்றி வைத்தது என் தெய்வம்!

* * *

வேலூரில் முசுலீம் லீக் மாநாடு. உடன் சென்ற நான் மாநாட்டைப் பற்றி 'நம்நாடு' இதழில் இன்னது எழுதப்போகிறேன் என்று சொல்லி, எழுதி முடித்துப் படிக்கக் கொடுத்தேன். 'என்ன தலைப்பு இடலாம்?' என்றேன். உடனே விடை கிடைத்தது. "எழுச்சி கண்டேன்; ஏற்றம் கண்டேன்" என்று

* * *

'குரங்குமனம்', 'அலங்காரக் கலை' முதலிய சில கட்டுரைகள் கருத்துக்களைப் பெற்று எழுதப் பெற்றவை.

* * *

ஒருமுறை பொங்கல் மலரில் என்ன எழுதுவது அட்டைப்படம் எப்படி இருப்பது என்பது போன்ற விவாதம் நடக்கிறது. "நீ என்ன எழுதுகிருய்?" என்றும் கேள்விக் கணை என்மீது பாய்ந்தது. விடை தெரியாது குழம்பினேன். "இன்னர் இன்னரைப்பார். சில வினக்களுக்கு விடைகேட்டுவா பேட்டிக் கட்டுரை ஒன்று எழுது என்ற கட்டளையை ஏற்று எழுதினேன்.

* * *

சென்னைக்கு வந்த புதிதில் எழுதிய ஒரு கட்டுரையில் வாடகைக்கு வீடு பிடிப்பது பற்றி இரண்டு வரி எழுதியிருந்தேன். "படித்தேன்—உன் கதையை எழுதியிருக்கிருய்" என்ற கேலிக்கணை. உடலையும் உள்ளத்தையும் புண்

ளுக்காத கேலிக்கணை—பாய்ந்தது.

* * *

1965-ஆம் ஆண்டு—பிப்ரவரித் திங்கள்—எனக்கு உடல் நலிவு ஏற்பட்டு இருபதுநாள் படுக்கை வாய்த்தது. மெல்ல உடல் தேறி வரும் நேரம்—ஒருநாள் "நான்கூட ஊரில் இல்லை, டில்லிக்குப் போகிறேன்—எல்லாம் நீதான் எழுதவேண்டும்" என்று ஆணை கிடைத்தது; பரிசு பெற்ற மகிழ்ச்சி பெற்றேன்.

* * *

எப்படி எப்படி எழுதுவது என்றும், எதை எதை எழுதுவது என்றும், எத்தனை எத்தனையோ நூல்களைக் காட்டி, என்னையும் ஒரு பொருட்டாக ஆக்கிச் சமைத்த அந்த நல்ல மனத்தை, அறிவின் திருவை, என் வாழ்வின் ஒளியை எங்குத் தேடுவேன்? எங்குக் காண்பேன்.

ஒரு நாள் "தசரதன் Safe writer டா" என்று இளங்கோவனிடம் சொல்லியது என்றும் என் நினைவில் நிற்கும்; அந்தச்சொற்கள் எனக்கு வாழ்வில் வழிகாட்டியாக விளங்கும அந்த ஒளியில் இருள் வென்றிட முயல்வேன்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

கடவுளை வணங்குகிறவர்கள்—தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள்—நோய் வரும்போது, மருத்துவர்கள் துணையை நாடாமல் இருக்கவேண்டும் என்பதும், நோயைத் தீர்த்துக் கொள்ள பொருள் செலவிடுவது வீண் என்றும் வாரியார் நம்புகிருரா?—அப்படியானுல் மீண்டும் நாம் வருந்துகிருேம், வாரியாருக்காக!

கடவுட் சிந்தனை தவிர வேறு சிந்தனையற்றிருந்த ரமண மகரிஷி, வாரியாரின் வாதப்படி பார்த்தால், இன்னும் உயிரோடிருந்திருக்க வேண்டாமா?

எப்படிப் பார்த்தாலும் வாரியார் ஆழ்ந்து சிந்திக்காமல் கருத்துக்களை வெளியிட்டுவிட்டார் என்பது புலனுகிறது.

முடிவாக தெய்வபக்தி இல்லாதவர் என்றே நம் அண்ணனை அவர் எண்ணிக் கொண்டாலும், 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று நாளெல்லாம் எண்ணி மக்களுக்காக வாழ்ந்த வாழ்வை, மக்களுக்காக அண்ணனின் நெஞ்சம் பதைத்த பதைப்பினை, ஏழை எளியவருக்காக சிந்திய கண்ணின் நீர்ப் பெருக்கத்தை வாரியார் தெய்வ பக்தியின் மறு பதிப்புத்தான் அது என்று எடுத்துக் கொள்ளாவிட்டாலும், தெய்வ பக்தியிலே திளைக்கும் இவர் தன் பக்தி வலிமையில் பெற்ற சக்தியைக் கொண்டு தெய்வத்திடம், 'தெய்வமே. அண்ணு தெரியாமல் தெய்வ நிந்தனை புரிந்துவிட்டார் அவரை மன்னித்து விடு' என்றல்லவா பிரார்த்தனை செய்து அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று அவாவியிருக்க வேண்டும்.

அதை விடுத்து "இது இல்லை அதனுல்தான் செத்தார்" என்று வியாபார முறையிலா 'காலட்சேபம்' செய்வது? வருந்துகிருேம், வாரியாருக்காக!

'என்ன செய்கிருேம் என்று அறியாமல் செய்கிருர்கள், எனவே அவர்களை மன்னியுங்கள்' என்ருர் ஏசு.

இதனை வாரியாருக்காக நாம் மீண்டும் எடுத்துச் சொல்லி, அவர் மன்னிப்பையும் ஏற்று நடந்ததை 'மறப்போம், மன்னிப்போம்!' வாரியாரே கேட்டுக்கொண்டுள்ளபடி. தீர்ந்த பிரச்னையாகக் கொண்டுவிடுவோம் — வாரியாருக்காகவும் அவருக்காக வக்காலத்து வாங்குவோருக்காகவும்!

இருண்டது உலகம்!

அனிச்ச மலரினும் அவருளம் மென்மை!
கனித்தமிழ் நாட்டின் கலைவாழ் கோயில்!
இளைஞர் பலரின் இதயம் நிறைந்த
வளையாப் புகழின் வடிவம் அவரே!
கல்விக் கடலின் கருத்து மழையால்
எல்லோர் உளமும் ஈரம் பெற்றது!
களர்நிலம் கூட கழனி யானது!
உலகம் உணர்ந்தது! உயரத் துடித்தது!!
மனிதனைக் காண மலர்தலை உலகம்
மனிதனைக் கண்டு மகிழ்ந்து கிடந்தது!
தமிழ்த்தாய் தனது தலைமகன் என்ருள்!
அமிழ்தம் தோற்றது அவர்தமிழ்ப்பேச்சால்!
கூற்றம் மட்டுமே கொஞ்சமும் பொறுத்திடும்
ஆற்றலை அற்ருன்! அழைத்துச் சென்ருன்!
இதயம் வடித்த இரத்தம்; விழிகளில்
நதியாய்ப் பெருகிட, நாடே அழுதிட,
பல்லவன் புகழின் பிறப்பினை எடுத்தான்!
நில்லாக் காலமும் நடந்தது கறையுடன்!
இருண்டது! உலகம் இருண்டது!!
மருண்டநம் வாழ்வும் முடிதலும் இலமே!

—புலவர் மணிமுடிச் சோழன்.

புகழ்ச் சுடர்!

இருளினில் தாயகம் இருந்த போதினில்
அரும்பிய ஞான ஆதவன் மறைந்தான்!
உவமைக் கடங்கா உன்னதத் தலைவனின்
சுவைமிகு வாழ்வுச் சுருதி கலைந்தது!
மெய்யாய் நம்முன் மின்னிய ஒன்று
பொய்யாய் நொடியில் போவது முண்டோ?
புதுமைத் தமிழெனப் பொங்கிச் சுழித்தவன்
கதையாய்க் கனவாய்க் கடிது போயினன்!
சொக்க வைத்திடும் சொல்லும் எழுத்தும்
மிக்க நிறைத்த மேலவன் போயினன்!
அறிஞர்க் கணியாய் அன்பர்க் குறவாய்
வறிஞர் துணையாய் வாழ்ந்தவன் போயினன்!
மணத்தினை ஏந்தி மருவிய தென்றல்
கணத்தினில் முடிந்த காட்சியைப் போல
'அண்ணா' என்னும் அரும்பொருள் இந்நாள்
மண்ணே டாழ்ந்தது; மறைந்தது அமிழ்தம்!
யுகத்துக் கோர்முறை உதித்திடும் மானிடன்
நம்மிடைத் தோன்றினன்; நம்முன் திகழ்ந்தனன்!
அந்த முகமோர் அமைதித் தாமரை!
அந்த மணமோர் அரிய மாமணி!

இந்தப் புவியில், இந்த நிலத்தில்
விந்தை புரிந்த வீணை உடைந்தது!
வகுத்த பண்பில் வளர்ந்த தூயவன்
அகத்தில் இலட்சியம் ஆயிரம் கொண்டவன்
மாய்ந்தான் என்பது மாயந் தானே?
பூந்தமிழ் உலகம் பொலிவை இழந்தது!
எங்கும் துயரம்! எங்கும் ஏக்கம்!
எங்கும் வெறுமை! எங்கும் அழுகை!
'அண்ணா அண்ணா அண்ணா' என்றே
கண்ணீ ரோடு கதறு வார்குரல்
காற்றில் மிதந்து காவிய மானது!
நேற்றைய முடிவு நினைவாய் விடிந்தது!
இனிய உயிர்நதி இறப்பில் கலந்தது!
புனிதனின் சரிதம் புகழ்ச்சுட ரானதே!

— கிளவு சேகரன்.

9.3.69

மறைவு. 3-2-1969 ஞாயிறு

அந்தோ அண்ணா!

வீசுகின்ற தென்றலென, விந்தியத்தில்
விளையாடும் கார்முகிலாய் அறிவு வெள்ளம்
பேசுகின்ற பேச்சினிலே பாயும்! நித்தம்
பீறிட்டு எழுகின்ற கயமைப் பேச்சால்
ஏசுகின்ற எவருக்கும் இன்பம் கூட்டும்
இனிக்கின்ற நெஞ்சத்தை, 'அண்ணா' என்று
ஆசிக்கும் நெஞ்சத்தை அலற விட்டு
அகத்தினிலே ஒளிவீசி மறைந்திட் டாயே!

தமிழுக்குத் தனியான இடத்தைத் தந்து
தமிழ்த்தாயின் தவப்புதல்வன் ஆனோன்! மக்கள்
அமிழ்திற்கும் மேலாக 'அண்ணா' என்று
அகந்தன்னில் இருத்திட்ட செம்மல்! நெஞ்சில்
உமிழ்கின்ற பகைத்தீயை அன்பு என்னும்
ஒப்பத்தல் அணைத்திட்ட அண்ணல்! கண்ணில்
குமிழாகி நிற்கின்ற கண்ணீர் முத்தில்
ஒளிர்கின்ற கண்மணியே போய்விட் டாயே!

ஆற்றுகின்ற நற்பணியால் அவனி எங்கும்
அழியாத நற்பெயரைப் பெற்ருய்! என்றும்
போற்றுகின்ற போலாகிச் சென்ருய்! நித்தம்
பூக்கின்ற பூவானுய்! மோசம் என்று
தூற்றுகின்ற எவருக்கும் சொல்லில் பாடம்
தோய்த்திட்ட குணக்குன்றே தினமும் மக்கள்
சாற்றுகின்ற தனிமதிப்பால் உயர்வாய்; நாங்கள்
தாங்கவொண்ணுத் துயரானோம், நீங்கிட் டாயே!

நைந்துருக நமையெல்லாம் நலிய விட்டு
ஞாயிறென ஒளிர்ந்தானும் மறைந்தான்! போற்றும்
பைந்தமிழ்த்தாய் ஈன்றிட்ட பான்மை மிக்கோன்
பாரினிலே ஏழைக்கே தினமும் நன்மை
செய்தவனை இழந்தோமே! 'அண்ணா' என்று
இனியழைக்க எவரேனும் உண்டா? இல்லை!
ஐயையோ! இத்துயரம் தாங்காதம்மா!
அகமெல்லாம் அழுகிறதே! அந்தோ அண்ணா!

கு. பிரான்சிஸ்

என்றும் எப்பொழுதும்....

வணக்கத்திற் குரியோனாய் வாழ்ந்திருந்தான்;
மறமிகுந்த தமிழ்மரபின் ஒளியாய் நின்ருன்;
பணக்குன்றின் மேலமர்ந்து பகட்டாய் வாழும்
பண்பில்லார் பலருறவை வெறுத்தே மக்கள்
மனக்குன்றின் மேலமர்ந்து செங்கோல் செய்தான்;
மாந்திநின்ருேம் அவனன்பை; இன்பங் கண்டோம்;
தனக்கென்றே வாழ்ந்திருக்கும் ஆசை இன்றித்
தமிழர்க்கு வழிகாட்டி மறைந்து சென்ருன்!

கடல்விடுத்துக் கரைபோட்ட கயலைப் போலக்
கனித்தமிழர் ஆனுர்; தெய்வம் ஆனுன்;
மடல்விடுப்பான் தம்பியரே எனத்தொடங்கி
மனத்திருக்கும் எண்ணமெலாம் காட்டிநிற்பான்;
உடல்கெட்டும் உயிர்கொடுத்தான் எங்கள் வாழ்வில்!
ஊருலகம் போற்றவாழ்ந்தான்; அவனுக் கென்றே
இடங்கொடுத்தாள் தாயாகி நிலத்து மங்கை;
இதயத்துள் வாழுகின்ருன் அண்ணா இங்கே!

'தேநிலவன்.'

ஓடி வந்தவள்?

கஸ்தூரி நடராசன்

செல்வச் செழிப்பான வாழ்க்கை ஒருவருக்குக் கிடைக்கிறதென்றால், அது ஒருக்கால் முன்னைத் தவம் காரணமாகவும் இருக்கலாம்; அல்லது அறிவுத் திறமையால் தேடிக்கொண்டதாகவுமிருக்கலாம்! அறிவுத்திறனால் தேடிக்கொண்டு சுகபோக வாழ்க்கையை ஒருவர் அனுபவிக்கிறார் என்றால் அந்த இன்பத்தைவிட வேறேதும் தேவையில்லை.

எனக்குக் கிடைத்த சுகவாழ்க்கை இருக்கிறதே–அது என் அக்காளின் அறிவுத் திறனால் தேடிக் கொடுக்கப்பட்டது என்பதை என்னால் உணர முடிகிறது.

படுத்துப் புரள பஞ்சணைக்குப் பஞ்சமில்லை. உட்கார்ந்து எழ குஷன் சோபாவுக்குக் குறைச்சலில்லை நின்ற இடத்திலிருந்து கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க எடுபிடி யாட்கள்!

கழுத்துச் சுமக்க முடியாத அளவுக்கு நகை நட்டுக்கள்! கட்டிச் சுமக்க முடியாத அளவுக்கு புடவை வகைகள்! அலங்கார வகைகளுக்கு ஆயிரம் பொருட்கள்! மொத்தத்தில் வீடு தேவலோகம்போல இருக்கும்! வாழ்க்கையும் புறப்பொலிவும் வருணனைக்கு அப்பாற்பட்டதாகத் தான் தோன்றும்!

இந்த இன்ப வாழ்க்கையைத் தான் என அக்காள் எனக்கும் தனக்குமாக உண்டாக்கி வைத்திருக்கிறாள். இவை யாவும் என் அக்காளின் அறிவு பெற்றெடுத்த அற்புதங்கள்!

ஆனால்...

இந்த அற்புதங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. செல்வச் செழிப்பை—சிங்கார வாழ்வை–பஞ்சணைச் சுகத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை! ஓடிவந்து விட்டேன்!

நான் பிறந்த கிராமத்தில் இப்போது என்னை, நான் ஓடிப்போய் விட்டேன் என்று விமர்சித்துக் கொண்டிருப்பார்கள்! அந்த விமர்சனத்துக் கிடையே சுவையான—சோகமான — பல கதைகள் இழையோடிக் கொண்டிருக்கவும் கூடும்

வாழ்க்கையை அனுபவிப்பதற்குக் கூட கொடுத்துவைத்திருக்க வேண்டும் என்பார்கள்! அந்த கொடுப்பினை எனக்கு இருந்ததாகவும் — என் விதி அதனைத் தடுத்து விட்டதாகவும்கூட கூறுவோர் அந்த கிராமத்திலிருக்கக் கூடும்!

யார் என்ன கூறினால் எனக்கென்ன? நான் ஓடிவந்துவிட்டேன்! வளர்த்து ஆளாக்கிய என் உடன் பிறந்தவளை விட்டு நூற்றுக் கணக்கான மைல்களுக்கு இப்பால் வந்து விட்டேன்! தனியளாக! நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பவளாக! இந்த கோவை மாநகரத்தில் என்னை யாருக்கும் தெரியாது! என் கதையும் தெரியாது!

மக்கள் கூட்டத்தில் மனசாட்சியுள்ளவர்களும் சிலர் இருக்கக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு. அந்த நல்லவர்களிடத்திலே என் கதையைக் கூறுகிறேன்!

தீர்ப்புரைக்கட்டும்! நான் ஓடி வந்தது தவறா? ஓடிவந்தவள் என்ற சொல்லுக்குரிய களங்கம் என்னைப் பற்றலாமா? என்று தீர்ப்புரைக்கட்டும்!

* * *

உலகத்தில் எத்தனையோ பேர். அக்காள் தங்கை, அண்ணன் தம்பி என்ற உடன்பிறப்புக்களோடு பிறக்கிறார்கள்! சிலர் ஒண்டிக்கட்டையாகவும் பிறந்து ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகி, அல்லது எடுத்துக் காட்டுக்குப் பயன்பட்டு வாழ்வோரும் உண்டு!

அப்படித்தான் நானும் ஒரு சகோதரியோடு பிறந்தேன்! எனக்கு மூத்தவள் அவள்! தந்தையின் பிரிவுக்குப் பிறகு தாய்க்குப் பாரமாகத் தான் நாங்கள் இருந்திருக்க வேண்டும்! அந்த பாரம் சுமக்க முடியாமல் தானோ என்னவோ தாயும் தன் வேலையை முடித்துக்கொண்டு போய்விட்டாள், போகும் போது பதின்மூன்று வயது பெண்ணாயிருந்த என்னை, என் அக்காளுக்குப் பாரமாக்கிவிட்டுப் போய்விட்டாள்.

என் அக்காள் நல்லவள்தான்! 'சீ அவள் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா' என்று இன்று என்னமோ நான் நினைக்கிறேன்! என்றாலும், அன்று அவள் நல்லவள்தான்!

திக்குத் தெரியாத காட்டில் சிக்கித் தவிப்பது என்பார்கள் இல்லையா, அதன் முழுப் பொருளையும் அப்போது நான் உணர்ந்தேன். அக்காளும் உணர்ந்துகொண்டாள். எனக்காக அவள், அவளுக்காக நான் வாழ்ந்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏனோ ஏற்பட்டது.

• • •

எப்படியோ பத்தாவது வரையில் படித்து முடித்துவிட்டேன்! படாத பாடுபட்டுப் படிக்க வைத்தாள் என் அக்கா படித்துத் தேறவேண்டிய பொறுப்பினை என்னால் உணர முடிந்தது! நன்றாகவே படித்தேன்! நல்ல மார்க் எடுத்து முதல் மாணவியாகத் தான் தேறினேன்!

ஆசிரியைப் பயிற்சிக்கு மனுப் போட்டபோது எனக்கு நான் பெற்றிருந்த மதிப்பெண்கள் நல்லபடி பரிந்துரை செய்தது.

முதல் முறையாக, பிறந்த ஊரை விட்டு, வளர்த்த அக்காளை விட்டு, வீட்டை விட்டு பயிற்சிக்காக நான் வெளியூர் புறப்பட்டபோது என் நிலையை எப்படி வருணிப்பேன்?

இருவரும் ஒருவர்க் கொருவர் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, எப்படியும் புறப்பட்டுத் தானாக வேண்டும் என்ற கட்டாயத்துக்காகப் புறப்பட்டு விட்டேன் பாவி!

உண்மையிலேயே பாவிதான் நான்! நான் பாவியாக இல்லாமலிருந்திருந்தால் புறப்பட்ட பின். பயிற்சி முடியும் வரையில் இரண்டு ஆண்டுகள் வரையிலும் பிறந்த ஊர் பக்கம் ஒருமுறையாவது வந்து போய் இருக்க மாட்டேனா?

நான் புறப்படும்போது அக்கா, வீட்டிலேயே ஒரு தையல் மிஷினை வைத்துக்கொண்டு கொஞ்சம் சம்பாதித்துக் கொண்டிருந்தாள்.

அதிலே மிஞ்சிய கொஞ்சம், எனக்கும் சிலவுக்கு வந்துகொண்டிருந்தது. இரண்டு மூன்று மாதங்கள்தான்! மிகக் குறுகிய இடைவெளிதான்! கொஞ்சம் பணம் அல்ல, 50-100 என்று தாராளமாக எனக்குப் பணம் வரத் தொடங்கியது! நான் பயின்ற இடத்தில் என் அந்தஸ்த்தும் உயர்ந்தது!

ஐம்பது, நூறு என்று அனுப்ப முடியும் அளவுக்கு அக்காளால் எப்படி முடிகிறது? இந்த யோசனைகள் எனக்கு அடிக்கடி வரும். ஆனால் அதற்குரிய பதிலைத்தெரிந்து கொள்ள வேண்டிய அக்கறை மட்டும் பிறக்கவில்லை. அது என் குற்றம் தானே! அங்குதானே நான் பாவியானேன்!

இறுதியாண்டு, பயிற்சி முடியும் சமயம் பள்ளி விடுமுறை, இந்த விடுமுறையில் ஊருக்கு வரலாம் என்றுதான் தீர்மானித்திருந்தேன். ஆனால் என் சகத் தோழிகள் எந்த விடுமுறைக்குத்தான் ஊர் வரும்படியாக விட்டார்கள்!

ஒவ்வொரு விடுமுறை காலத்திலும் ஒரு சுற்றுலா திட்டம்! பள்ளிப் பருவம்! கைநிறைய காசு!! சுற்றுலா ஆசை விட்டுவிடுமா?

உணர்ந்து கொண்டிருந்த வாழ்க்கைத் தத்துவங்களை, கையிலே பஞ்சமின்றப் புழங்கிக்கொண்டிருந்த பணம், பஸ்மீகரம் செய்துவிட்ட பின்பு, வாழ்க்கைத்தத்துவமாவது! ஏழ்மை எண்ணமாவது! வேண்டிய போதெல்லாம் வேண்டிய அளவுக்கு அக்காள் நூறு நூருக அனுப்பிக் கொண்டிருக்கிருளே!

* * *

பயிற்சி முடிந்தது! பிரியாவிடை பெற்றுப் பிரிந்துவிட்டோம்! இனி மேல் சுற்றுலா திட்டத்தை யாரும் போடமாட்டார்களே! ஊருக்கு வந்துதானே ஆகவேண்டும்! வந்து சேர்ந்தேன் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு!

புலியூர் கிராமத்தில் வள்ளுவர் வீதியில் கடைகோடியிலிருந்த எங்கள் பாழடைந்து கலனன பழையவீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன்!

திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன். சுற்றும் முற்றும் கண்ணோட்டம் விடுகிறேன்! இது வள்ளுவர் வீதிதானா? என்று அறிந்துகொள்ள முயற்சிக்கிறேன். வள்ளுவர் வீதிதான்! சந்தேகம் இல்லை. அப்படியானால் எங்கள் அந்த பழைய வீடு எங்கே? இடிந்து விழுந்திருந்த சுவர் எங்கே?

திகைப்பு என்னைப் பற்றிக்கொண்டது, எங்கள் வீடு நிச்சயமாக இங்கேதான் இருந்தது! இப்போதில்லையே! அழகே வடிவான சிறிய பங்களா அல்லவா இருக்கிறது! அப்படியானால் அக்காள் வீட்டை விற்றுவிட்டாளா? வீட்டை விற்றுத்தான் எனக்கு நூறு நூருகப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தாளா? அவ்வளவு பணம் அனுப்பும் அளவுக்கு அந்த வீடு விலைபோனதா?

திகைப்பின் கணபரிமானம் அதிகரித்துக்கொண்டே இருக்கும்போது அதோ, என் அக்காள் வருகிருள்! அந்த பங்களாவுக்குள்ளிருந்துதான் வருகிருள்! தேவலோக ரம்பை என்று வருணிக்கத்தக்க அளவுக்கு எழிலார்ந்த கோலத்துடன் வருகிருள்!

என்னை அப்படியே வாரி அணைத்துக் கொள்கிருள்! பழையவாஞ்சை அப்படியே இருந்தது! பழைய அன்பு அப்படியே இருந்தது! ஆனால் பழைய ஏழ்மையைக்காண முடியவில்லையே!

"அக்கா" என்று மட்டும்தான் என்னால் கேட்க முடிந்தது! வாயடைத்துப் போனேன்! "எல்லாம் அப்புறம் சொல்கிறேன்! உள்ளேவா!" என்று சொல்லி உள்ளே அழைத்துப் போனாள்.

உள்ளே போகிறேன்! வீட்டின் அமைப்பும் அலங்காரமும் என்னை மயக்கமுயறச் செய்கிறது! அறை அறையாக அழைத்துச்சென்று காட்டுகிருள்! விழிகள் மட்டும்தான் விரிகின்றன! ஒரு புடவைக்கு அடுத்து மாற்றுப்புடவைக்குக்கூட வழியின்றித் தவித்த அக்காளா இத்தனைவித பட்டுப் புடவைகளும், டிஷ்யூ புடவைகளுமாக பீரோ பீரோவாக அடுக்கிவைத்துக்கொண்டிருக்கிருள்? கண்ணாடி வளையலுக்குக்கூட காசுக்குக் கஷ்டப்பட்டவளா இப்படி ஜோடி ஜோடியாக வைர வளையல்களை அடுக்கிவைத்துக் கொண்டிருக்கிருள். கழுத்திலே மணிக்கயிறு தொங்கிக் கொண்டிருந்தவளா, இன்று பெட்டி நிறைய பொன்னகைகள் பூட்டி வைத்துக்கொண்டு அழகு பார்க்கிருள்?



அதிர்ச்சியால் என் மூளையே வெடித்து விடும்போல இருக்கிறது! கூடத்தை அழகுபடுத்தும் அலங்காரத்தைப் பற்றிச் சொன்னால் என் இதயம் இயங்குமோ என்னவோ? ரேடியோ கிராம் ஒருபுறம். தனி வானொலி இன்னொருபுறம். ஒரு மேஜையின் மேல் டிரான்சிஸ்டர். கூடத்தைச் சுற்றிலும் சோபாசெட்டுகள். வரவேற்பு அறை என்று ஒன்று. அதிலும் குஷன் சோபாக்கள் நிறைந்து வழிந்தன! மொத்தத்தில் அக்காள் ஒரு பணக்காரியாக இருக்கிறாள் என்பது தெரிந்தது! வெறும் பணக்காரி என்றால் போதாது! லட்சாதிபதி என்ற அடைமொழி இட்டாலும் தகும்!

வாய்விட்டுக் கேட்டுவிட நினைத்தேன்! விட்டால்தானே! வெந்நீர் தயாராகி விட்டதாம். குளிப்பதற்கு அழைக்க வருகிறாள் ஒருத்தி!

குளித்து முடித்துவிட்டு வருகிறேன். சாப்பாடு தயாராகிவிட்டது! சாப்பிட்டு முடிக்கிறேன். தூங்குமாறு கட்டாயப்படுத்தப்படுகிறேன். தூக்கம் என்ன கூப்பிட்டவுடன் ஓடிவந்து விடக் கூடியதா? மறுக்கிறேன்! விடுகிறாளா அக்கா! ஓய்வெடுப்பதாம்! தூங்குவதற்குப் பெயர் ஓய்வு என்று பொருள் கொண்டு விட்டாளே அவள்? மறுக்க முடியாமல் சென்று படுக்கிறேன். மின் விசிறி ஆசுவாசப் படுத்துகிறது!

நான் தூங்கியாக வேண்டும்! அக்காளுக்காகவாவது தூங்கவேண்டும். மெத்தையில் முதன் முதலாகப் படுக்கிறேன்! ஏதோ ஒருவித கூச்சம்! மெத்தை எழுந்து, தணிந்து ஏதோ பாடுபடுத்துகிறது! கண்களை மூடிக்கொண்டு கிடக்கிறேன்!

அரை மணி நேரம் அப்படியே கழிந்திருக்கும். கீழே ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறது. கவனிக்க வேண்டும் என்ற ஆர்வம்! எழுந்து செல்கிறேன்!

யாரோ ஒரு பெரியவருடன் மிக நெருங்கி அக்காள் அமர்ந்து கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருக்கிறாள். ஆழ்ந்த சிந்தனையை அவள் முகம் பிரதிபலிக்கிறது. அவருக்கு ஐம்பது வயது இருக்கக்கூடும்! யார் அவர்?

அந்தக் காட்சியைக் கண்டவுடன் எனக்கு வேறு சில எண்ணங்கள் பிறக்கின்றன! அக்காள் ஏன் இன்னமும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறாள். இந்த அளவுக்கு செல்வச் செழிப்பில் உள்ளவளுக்கு இன்னமும் அந்த எண்ணம் ஏன் வரவில்லை?

புதியதொரு எண்ணம் முகிழ்க்கிறது. மாடிப் படியிலிருந்தபடியே கூடத்தின் முகப்பைக் கவனிக்கிறேன்.

சர்வாபரண அலங்காரத்தோடு என் அக்காளும், அருகில் ஒரு பெரியவரும் நின்று எடுத்துக் கொண்டுள்ள புகைப்படம் ஒன்று பெரிதாக என்லார்ஜ் செய்துமாட்டப் பட்டிருக்கிறது.

இப்போது என் அக்காளின் அருகில் அமர்ந்திருப்பவர் அவராகத் தானிருக்க முடியும். யார் அவர்?

புரிந்துகொள்ள முடியவில்லை. அதோ, அக்காள் எழுகிறாள். நான் மாடிக்கு ஓடி படுக்கையில் விழுகிறேன். அங்குதான் அக்காள் வந்து நிற்கிறாள்.

"செல்வி!" என்று அழைக்கிறாள். மெள்ள, கண்களை விழிக்கிறேன். "தூங்கவே இல்லையாம்மா!"

"தூக்கம் வரவில்லை அக்கா!"

"போனால் போகட்டும்! ஒரு முக்கியமான விஷயம்—பேச வேண்டும்!"

என் சந்தேகங்களுக்கு விடை கிடைக்கப்போகிறது என்ற எண்ணத்தில் எழுந்து அமர்கிறேன். அருகில் அக்காவும் அமர்கிறாள்.

"செல்வி! உனது திருமண ஏற்பாடுகளை முடித்து விட்டேன்! பெரிய இடம்! அரசாங்க வேலை! அமைச்சரிடத்திலேயே வேலையாம்! எனக்கு முழுத்திருப்தி!"

"நீ பாட்டுக்கும் பேசிக் கொண்டுபோகிறாயே அக்கா! எனது திருமணம்இருக்கட்டும்; முதலில் உன் திருமணம் முடியட்டுமே!"

"பைத்தியக்காரி! எனது திருமணத்தைப்பற்றி கவலைப் படவேண்டியது நான் தானே! செல்வி! என்னைப்பற்றி எதுவும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாதே! பிரச்னையாகவும் ஆக்கிக்கொள்ளாதே! என் வாழ்க்கையின் ஒரே லட்சியம் உனக்கு முழு வாழ்வு தேடித் தரவேண்டும் என்பது தான். அதுதான் நம் அம்மாவின் ஆசை! அதனை நிறைவேற்றி விட்டேன்! கடைசிக் கடமை! அதுவும் விரைவில் முடிந்து விடக்கூடும்! செல்வி! நாளை பெண்பார்க்க பிள்ளை வீட்டார் வருகிறார்கள் தயாராக விரு"

என்று அடுக்கிவிட்டு சட்டென்று எழுந்து கீழே போய்விட்டாள்! என் சந்தேகங்களுக்கு விடை கிடைக்கவில்லை. யார் அந்த பெரியவர்? வினாவாகவே நிற்கிறது! யாரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது? அக்காளிடமே கேட்கலாமா? அது அழகா? முறையா?

எதுவும் புரியாமல் தவிக்கிறேன்! எங்கும் வெளியில் சென்று சுற்றி வரக்கூட மனம் இல்லை, படுக்கையிலேயே புரள்கிறேன்!

* * *

எப்படியோ தூங்கியிருக்கிறேன்! இரவும் கழிந்து பொழுது புலர்ந்து விட்டிருக்கிறது! காபியுடன் ஒருத்தி வந்து எழுப்புகிறாள்! எழுந்து காபியைக் குடித்துவிட்டு, காலைக்கடன்களை முடிக்கிறேன்.

இயந்திரம்போல பொழுது நகர்ந்து கொண்டிருக்கிறது. மாலை மூன்று மணி இருக்கும். வாசலில் ஒரு கார் வந்து நிற்கிறது! அந்தப் பெரியவரும், இன்னும் யார்யாரோகூட காரிலிருந்து இறங்கி உள்ளே வருகிறார்கள், ஒருக்கால் அவர்கள் தான் பிள்ளைவீட்டாரோ என்னவோ!

நான் நினைத்தது சரிதான்! அவர்கள்தான் பிள்ளைவீட்டாராம்! பரபரப்படைகிறது பங்களா! பங்களா என்றுதானே சொல்லவேண்டும்! வீடு என்றால் நாகரிகக்குறைவல்லவா!

விடுவிடென்று நகைநட்டுக்களால்அலங்கரிக்கப்படுகிறேன். வெள்ளித்தட்டு ஒன்றில் நாலைந்து வெள்ளி டம்ளர்கள் நிறைய ஓவல் ஊற்றப்பட்டு என் கைகளில் திணிக்கப்படுகிறது!

நான் சென்று பிள்ளை வீட்டாருக்குத் தர வேண்டும்! அதுதான் முறையாம்! அப்போதுதான் நான் பிள்ளையைப் பார்க்கவும், பிள்ளைவீட்டார் என்னைப்பார்க்கவும்முடியுமாம். மரபும் அதுதானாம்!

இயந்திரம்போல எல்லாம் முடிந்தது! குறுகுறுவென்ற பார்வையுடன் ஒல்லியான—அழகான —கண்ணாடியணிந்த—சிவந்த மேனியுடைய ஒருவர் அங்கிருந்தார் என்று நினைக்கிறேன்! அவர்தான் என்னைப் பலிகொள்ள வந்தவரோ என்னவோ!

பிரமாண்டமான அமர்க்களத்துக்குப் பிறகு — விருந்துபசாரத்துக்குப் பிறகு — இரவு ஒன்பதுமணி சுமாருக்கு வந்தவர்கள் அனைவரும் திரும்பிவிட்டார்கள்! பெண்ணைப் பிடித்திருக்கவேண்டும்! இல்லையென்றால் விருந்து நடந்திருக்குமா?

அந்தப் பெரியவர் மட்டும் போகவில்லை என்று தெரிகிறது. இரவு அங்கேயே தங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன்!

* * *

இவ்வளவு பெரிய நாகரிக பங்களா என்றாலும் தண்ணீர்க் குழாய் வசதி இல்லை! கிராமம்தானே! அரசினரின் கண் பார்வை அல்லது பஞ்சாயத்தின் பொருளாதார வசதி ஒழுங்குபடாமலிருக்கலாம்!

குளியலறையில் நீர் கொண்டு வந்து கொட்டி வைத்திருக்கிறார்கள்! என்றாலும் அது எனக்குப் பிடிக்கவில்லை. கிராமக் குளத்திற்குச் சென்று நன்கு நீச்சலடித்துக் குளிக்க வேண்டுமென்று ஆசை!

ஆசை வெட்கமறியாது என்பார்கள்! அக்காளிடம் வெளியிடுகிறேன் என் ஆசையை! சிரிக்கிறாள்! அந்தச் சிரிப்பிலே எவ்வளவோ பொருளை அவள் உணரலாம்! என்னால் உணர முடியவில்லை. பள்ளி இறுதி வகுப்பு முடிக்கும் வரையில் அந்தக் குளத்தை என் இஷ்டப்படி ஆட்டிப் படைத்திருக்கிறேனே! அக்காள் சிரித்துக்கொண்டே மறுத்துவிடுகிறாள்!

கடைசியாக என் பிடிவாதத்துக்குப் பணிகிறாள். ஆனால் குளத்தில் குளிக்க அல்ல! தெரு முனையில் உள்ள கிணற்றில் சென்று முகம் கழுவி, பல் துலக்கிக்கொண்டு வருவதற்கு மட்டும்!

இந்த அளவுக்கு ஒப்புக்கொண்டாளே அது போதும்! ஒருகுடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு கிணற்றடிக்குப் போகிறேன்!

என் பழைய தோழிகள் சிலர்! அங்கே எனக்கு முன்பே வந்து நீரெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! என்னைக் கண்டதும் ஓடிவந்து கட்டிப்பிடித்துக்கொள்வார்கள்! கேள்வி மேல் கேள்வி போடுவார்கள்! பதில் சொல்ல முடியாமல் திணறிப் போக வேண்டியிருக்கும் என்ற நெஞ்சுப் படபடப்புடன் மெள்ள நகர்கிறேன்.

என்னைக் கண்டதும், அவர்களில் எந்த ஒருவருக்கும் முகமலர்ச்சி ஏற்படவில்லை. யாரோ தீண்டக்கூடாத ஒருத்தியை அருகே விட்டுவிட்டதைப் போன்ற உணர்ச்சியைக் காட்டினார்கள்! யாரும் எதுவும் பேசவில்லை. அது எனக்கு ஏமாற்றத்தை மட்டும் அல்ல, ஆத்திரத்தையும் உண்டாக்கியது. நான் மட்டும் அப்படிப்பட்டவர்களோடு எதற்குப் பேசவேண்டும்?

பேசாமல் திரும்பி நடக்கிறேன். அவர்கள் என்னைப் பற்றிப் பேசிக்கொள்ளும் பேச்சுக்கள் தெளிவாக என் காதில் விழுகின்றன!

"இப்படி யாரு இந்த மானங்கெட்ட வாழ்வு வாழச் சொன்னா? ஆயிரம் பொய்யைச் சொல்லி வேணுமானா ஒரு கல்யாணத்தைப் பண்ணுன்னு சொல்லியிருக்காங்களே ஒழிய — ஆயிரம் அக்கிரமத்தைச் செய்து இந்தக் கல்யாணத்தை யாரு செய்ய* சொன்னா?"

"அந்த சாந்திக்குதான் எவ்வளவு தைரியம்! கட்டையிலே போற வயிசு உள்ள ஒருத்தனோட கள்ளசினேகம் கிடைக்கலேன்னா. இந்தப் பெரிய சம்பந்தம் கிடைச்சி இருக்குமா செல்விக்கு"

"இவளைத்தேடி சம்பந்தம் பண்ண வந்தவுங்களும் சாந்தி மாதிரி தானோ என்னவோ!"

"எல்லாம் அவ தங்கச்சி நல்லா இருக்கணும் ங்கிறத்துக்காகத்தானாம்! அதுக்கானா இப்படி கூறுகெட்டுத் திரியணுமா என்ன?"

"கொஞ்சநாள் போகட்டுமே! அக்காளோட வண்டவாளம், தானா தண்டவாளம் ஏறாமலா போயிடும்? கேடுகெட்ட கிழட்டுப் பயலோட அவஅடிக்கற கொட்டம் அடங்க எத்தனை நாளாகப்போறது? பார்க்கமலா இருக்கப்போறோம்?"

"செல்வியும் இதெல்லாம் எப்படி அனுமதிக்கிறாளுன்னு தெரியலியே!"

"செல்வி என்ன? சாந்தியோட தங்கச்சிதானே"

அதற்குமேல் அங்கு நின்று அந்த உரையாடலைக் கேட்க முடியவில்லை. கால்கள் தடுமாறின! மூளை குழம்பியது! எனது எல்லா சந்தேகங்களுக்கும் விடை கிடைத்துவிட்டது! எப்படியோ வீடு வந்து சேர்ந்தேன். எப்படியோ தப்பி அந்த வீட்டைவிட்டு வெளியேறினேன்!

* * *

நான் ஓடிப்போய் விட்டேன் என்று இப்போது அங்கே பேசுவார்கள்! நானும் என் அக்காளின் தங்கைதான் என்று பேசிக் கொண்டவர்கள் கூட நான் ஓடிப்போய்விட்டேன் என்று விமர்சிப்பார்கள்! விதவிதமான கதைகளைப் பின்னி என் பெயரோடு உலவ விட்டிருப்பார்கள் அவர்கள்!

என் நலனுக்காகத்தான் அக்காள் இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டாளா? அப்படிப்பட்ட அறிவின் ஆற்றலால்தான் நான் செல்வச் செழிப்பில் புரள வேண்டுமா? நாய் விற்ற காசு குரைக்காது. ஆனால் மானம் விற்ற காசு பேசுகிறதே! நாயின் ஊளையைவிட பயங்கரமாகப் பேசுகிறதே!

நான் ஓடிவந்து விட்டேன்! ஆசிரியப் பணி எனக்கு வாழ்க்கை தந்துவிட்டது! அக்காளின் முகத்தை மெள்ள மெள்ள மறந்துகொண்டிருக்கிறேன்! மாணவச் செல்வங்களின் முகங்கள் நின்று நிழலாடுகின்றன அகத்தில். ஓடிவந்தவள் தான் நான்! தவறா? நல்லோரே, என் முடிவு தவறா? இதயம் உள்ளோரே, என் முடிவு தவறா? ✽

3-ம் பக்கம் தொடர்ச்சி

கொண்டிருக்கிறது. இதுபோலவே, பல மாநிலங்கள் உணவு விவகாரத்தோடு ஒரு போரே நடத்திக் கொண்டிருக்கின்றன. வானமும் பொய்த்துப்போயிருக்கும் இந்த நிலையில், பம்ப்செட்டுகளையும், ரசாயன உரங்களையும், நம்பியே செயல்படவேண்டிய நிலையிலிருக்கும் போது, இதனை அடிப்படையில் பயன் படுத்தும் விவசாயிகளின் ஊக்கமே குன்றிவிடத்தக்க அளவுக்கு வரிவுயர்வு—சொற்பமானாலும்கூட — அறிவித்திருப்பது வயிற்றோடு போராடிக்கொண்டிருக்கும் மக்களை அறைகூவலுக்கு அழைப்பதாகவே பொருள்படும்.

நடுத்தரக் குடும்பத்தை மிகமிக பாதிக்கக்கூடிய அளவுக்கு மொரார்ஜி பட்ஜெட் இருக்கிறது. சான்று, மண்ணெண்ணெ, நடுத்தர சிகரெட் போன்றவைகளுக்கு விதித்திருக்கும் வரி இனங்களையே காட்டலாம்.

மத்திய அரசிடம் மணிக்கு மணி, வெவ்வேறு வடிவத்தில் அதிகாரம் குவிந்துகொண்டு வருவது தடுக்கப்படும் வரையில் இந்த நிலைமைகளுக்கு முடிவும் இல்லை—மக்களுக்கு விடிவும் இல்லை! ●

புலமைக்கு மதிப்பில்லையே!

எம். முருகன்

தமிழ்மொழியை முறையாகப் படித்த மேதை
தரமான கவிபுனையுந் திறமை வாய்ந்தோன்
இமிழ்கடலின் அலைகளென கணக்கி லாத
ஏற்றமிகு கருத்துக்கள் எழுத வல்லான்
கமழ்கின்ற இலக்கியப்பூங் காட்டில் நாளும்
களிப்போடு உலவிவருந் தேனீ வீணே
உமியாகப் பதராக மதிப்பா ரின்றி
உழன்றிட்டான் கொடியபெரும் வறுமை சூழ்ந்து

எத்தனையோ இதழ்களிலே எழுதிப் பார்த்தான்.
எல்லாரும் புகழ்ந்தார்கள்! ஆனால் என்ன?
பத்தென்றும் ஐந்தென்றுஞ் சிலரே மட்டும்
பணங்கொடுத்தார் மற்றவர்கள் பெயரைப் போட்டார்
எத்தனைநாள் புகழ்ஒன்றே சோறு போடும்
எழுந்தலைக்கும் பசிபோக்க நினைப்பார் யாரே!
அத்தனையும் எழுதியது போது மென்று
அனைத்தையுமே மூட்டைகட்டிவைத்தான் சோர்ந்தான்.

என்றுநல்ல காலம்வரும் என்றே யெண்ணி
இருக்கின்ற போதுஉயிர் நண்பர் வந்தார்.
துன்பமெல்லாம் அவரிடத்துச் சொன்னான்; கேட்டு
துடித்திட்டார்! சோர்வகற்றும் மொழிகள் சொன்னார்
"உன்னைப்போல் கவிஞனுக்கு வாழ்வா இல்லை?
உலுத்தரெலாம் மேநிலையில் வாழும் போது!
என்னோடு புறப்படுநீ! எனது நண்பர்
இருக்கின்றார் இயக்குநராய் ஸ்டுடியோ ஒன்றில்

உனக்குஒரு சான்ஸ்வாங்கித் தருவேன் வாவா,
உயர்நிலைக்கு வந்திடலாம் முயன்றா யானல்
மனக்கவலை தீர்ந்துவிடும்! மகிழ்ச்சி பொங்கும்!
மங்காத புகழ்சேரும்; உனது பாட்டு
தினந்தோறும் பலர்நாவில் ஒலிக்கும் வெள்ளித்
திரையினிலே முழக்கமிடும்! போவோம் இன்றே"
எனக்கூறி உடனழைத்துப் போனார் நண்பர்!
இவன்கனவு பலகண்டு மகிழ்ந்து போனான்!

பன்னூறு பாட்டுக்கள் எழுதி னாலும்
பத்திரிகை கொடுக்காத தொகையை ஆங்கே
சின்னதொரு பாட்டுக்குப் பெறலா மென்ற
சிந்தனையால் பூரித்தான்! ஸ்டுடியோ உள்ளே
சென்றார்கள்! இயக்குநரை நண்பர் பார்த்து
சேதியெலாம் விரிவாக எடுத்துச் சொன்னார்.
"எனக்கொன்றுந் தடையில்லை, வரட்டும் நாளை
எனமுடிவில் இயக்குநரும் ஒத்துக் கொண்டார்.

எழுதிவைத்தக் கவிதையெலா மெடுத்துக் கொண்டு
இளங்கவிஞன் மறுநாளில் போனான்! ஆங்கே!
குழுமிநின்ற நடிகையரின் நடுவில் நின்று
கொண்டிருந்த இயக்குநரை வணங்கிச் சொன்னான்
"எழுதியுள்ள கவிதையெலாங் கொண்டு வந்தேன்!
இதிலேதுந் தேவையெனில் வைத்துக் கொள்வீர்!"
எழுந்துமலை அசைந்துவரல் போல வந்து
இயக்குநரும் கவிபடித்தார்! பின்னர் சொன்னார்:

"இலக்கியமா, இலக்கணமா, என்ன மிஸ்டர்?
இதையெல்லாம் இங்கேயார் சீண்டு றுங்க?
எலந்தபயம் வாயபயம் மாம்ப யம்போல்
எதுனச்சும் இருந்தாக்கக் கொண்டு வாயேன்!
புலவன்னு சொல்லிகிட்டா போதா தப்பா,
பெரயச்சிக்கவுந்தெரிஞ்சுக்கனும்! அதுதான்வேணும்
நெலவுகிற நெலமைய நான்சொல்லிப் புட்டேன்!
நீநம்பா விட்டாலுங் கவலை யில்லே!"

எனச்சொன்ன மொழிகேட்டான்! உள்ளம் நொந்தான்
"எனக்கெல்லாம் அதைப்போல எழுது தற்கு
மனமில்லை! தமிழ்கொல்ல விருப்ப மில்லை!
மன்னிப்பீர்! வருகின்றேன்! என்று போனான்!
கனலெனவே கொதித்துஉளம் தமிழை எண்ணிக்
கதறியது! யாரையவன் நொந்து கொள்வான்?
புனல்வளமுங் கனிவளமும் பொங்கும் நாட்டில்
புலமைக்கு மதிப்பளிக்கும் வளமில் லையே!

கேட்டீரா சேதி!

மத்திய அரசின் செய்தித் துறை இந்தக் கிழமை, ஒரு செய்திப் படம் தயாரித்து வெளியிட்டிருக்கிறது! அந்தப் படத்தில், வானளாவ எழுந்துள்ள பலஅடுக்கு மாடிக் கட்டிடங்கள் பல, தீயின் நாவுக்கு இரையாகின்றன! வணிகக் களங்களில், கடைகள் பல சூறையாடப்பட்டு, படுபயங்கரமான தோற்றங்கள் சித்திரிக்கப்படுகின்றன, நூற்றுக் கணக்கான கார்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டு, இரும்புச் சாமான்கள் உருகி வழிந்துள்ள காட்சி உருக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது! இரயில் பெட்டிகளும், என்ஜின்களும் எரியுண்டு, கண்களால் காணமுடியாத அளவுக்கு நிகழ்ந்துமுடிந்த கயமைத்தனம் சித்திரிக்கப்பட்டு சிந்தையை வருடி விடுகிறது. உருகி ஓடியிருக்கும் தண்டவாளங்கள் உள்ளத்தையும் உருகச்செய்துவிடுகிறது! இவையல்லாமல் தந்திக் கம்பங்களும், பொது நிறுவனங்களும் தாக்குதலுக்காளாக்கப்பட்டு தலைவிரி கோலமாக நிற்கின்றன! மக்கள் கூட்டம், வெறியர்களின் தாக்குதலுக்காளாகி, கூட்டம் கூட்டமாகப் பதட்டத்தோடு, உயிரைக் காத்துக்கொள்ள ஓடும் காட்சிகூட காணப்படுகிறது. மக்கள், போலீசாரின் உதவியோடு நடமாட வேண்டிய நிலையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது! என்ன நினைக்கிறீர்கள்? எந்தநாட்டில் இந்த நிகழ்ச்சி என்று மயங்குகிறீர்களா? தேவையில்லை. அந்தப் படத்தின் விமர்சனத்திலேயேஇதுபற்றிவிளக்கி விடப்பட்டிருக்கிறது. ஆமாம், அண்மையில் பம்பாய் மாநிலத்தில் சிவசேனை என்ற வெறியர்கூட்டம் நடத்தி முடித்த வன்செயல்களைத்தான் படமாக்கி இருக்கிறார்கள்! பல கோடி ரூபாய் நட்டம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது! இதில் ஒரே ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், சிவசேனையின்வெறியாட்டத்தைப் படம் எடுத்துக்காட்டி மக்களுக்கு விளக்கிடவேண்டும் என்று மத்திய அரசு நினைத்திருக்கிறதே, அதுதான்! ஆனால், அந்த வெறியர்களை அடக்கி ஒடுக்கி மக்களது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத்தர இன்னமும் முன்வரவில்லையே அதுதான்!

* * *

இந்திய அரசியல் சட்டம் எத்தனை எத்தனையோ நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது! சட்ட விதிகள் பற்றிய சர்ச்சைகளையும் சந்தித்திருக்கிறது! என்றாலும் 1967க்குப் பிறகு அது சந்திக்க நேர்ந்த நெருக்கடிகள் பரிதாபத்திற்குரியவை! விபரீத நிலை என்ற அளவுக்கு விமர்சனத்துக்குரியவை! சட்ட மன்றத் தீர்மானத்தை எதிர்க்க கவர்னருக்கு உரிமையுண்டா? சட்டமன்றத் தலைவர் தீர்ப்புக்கு அமைச்சரவை கட்டுப்பட்டதா? கவர்னர் அந்த தீர்ப்புக்குக் கடமைப்பட்டவரா? கவர்னர் உசிதப்படி சட்டமன்றமா? சட்டமன்ற விருப்பப்படி கவர்னரா? சட்டமன்றத்தை பகிஷ்கரிக்கும் உரிமை கவர்னருக்கு உண்டா? அரசியல் சாசனம் கவர்னருக்குக் கட்டுப்பட்டதா? கவர்னர் அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரா? மத்திய அரசு, மாநில அரசை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தமுடியும்? எவை எவற்றில் மாநில அரசு மத்திய அரசை மீறிச்செயல்பட முடியும் என்பதுபோன்ற சிக்கல்கள் 1967க்குப் பிறகு தோன்றி 1969ல் வானளவா வளர்ந்துவிட்டிருகிறது! அண்மையில் நடைபெற்ற 4 மாநில இடைத்தேர்தல்கள் இந்த நிலைமையைத் தோற்றுவித்துள்ளன! சிறப்பாக மேற்குவங்காளமும், பீகாரும் இது போன்ற சிக்கல்களை விளைவித்திருக்கின்றன! பீகார் இதில் ஒரு தனிரகம்! ஒருவரை அமைச்சரவையில் இடம் பெறச் செய்வதில் சில சிக்கல்களாம்! பாவம், அஜாய் முகர்ஜி! என்றால் போதும்! இந்த நிலைமைகள் முற்ற முற்ற ஒன்று மாநில மத்திய உறவுநிலை பற்றி மறு ஆய்வு செய்து சமத்துவ நிலை நிலவத்தக்க இன்னொரு வழிமுறை கண்டாகவேண்டும்! இல்லையென்றால் அரசியல் சாசனத்தையே புதிதாக மாற்றி அமைக்கவேண்டும்! வருங்காலம் எதனைச் செய்யப்போகிறது என்பதுதான் இன்றைய கேள்விக்குறி!

* * *

மொரார்ஜி தேசாய்க்கு எந்த ஒன்றில் திறமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் வரிபோடுவதில் மட்டும் அலாதி திறமையுண்டு என்று கடந்த பல ஆண்டுகளாகவே நற்சான்று பெற்றுவிட்டிருப்பதைப் போலவே, மனித மனங்களையும், யதார்த்த நிலைகளையும் கணித்துக் கணக்கெடுக்கத் தெரியாவிட்டாலும், வரி பாக்கியுள்ளோரை மட்டும் சரியாகக் கணித்து கணக்கெடுப்பதில் வல்லவர் என்றும் பாராட்டித் தீரவேண்டியவராக இருக்கிறார்! 1968 செப்டெம்பர் 30-ம் நாள் முடிய மட்டும் 471 கோடியே 11 இலட்சம் ரூபாயகள் வரி பாக்கி இருப்பதாக அறிவித்திருக்கிறார் இப்போது! இது கணக்குப்படியாக உள்ள விவரம் மட்டுமாகத்தானிருக்க முடியும்! மனித மனத்தை உணரமுடியாதது போலவே, புதையுண்ட கணக்கையும் கண்டுபிடிக்க முடியாதல்லவா அவரால்!

* * *

கொள்கை மாறாட்டப் போட்டி காரணமாக இந்தியத் துணைக்கண்டத்தில்தான் அடி தடி குத்து வெட்டு என்றில்லை. உலகத்தின் எந்த நாட்டுக்கும் அது பொது என்பது நாளுக்கு நாள் நிதர்சனமாகிக் கொண்டு வருகிறது. ரஷ்யாவும், சீனாவும் கம்யூனிஸ்டு நாடுகள் தானே! ஒரு நாட்டுக்குக் கடவுள் லெனின் என்றால் இன்னொன்றுக்கு மாசேதுங்! லெனினும் கம்யூனிசத் தத்துவத்தின் தந்தை என்று கூறப்படுவர்தான்! மாசேதுங்கும் அப்படி வருணிக்கப்படுபவர்தான்! என்றாலும் ஆதிக்கம் என்று வந்து விடுகிறபோது லெனினாவது? மார்க்சாவது! எங்கெல்சாவது! நீயா? நானா என்று போட்டி வந்துவிட்டதற்கப்புறம் அண்ணனாவது தம்பியாவது! இப்படித்தான் அண்மைக் காலமாக சீனாவும் ரஷ்யாவும் ஒன்றையொன்று பழித்துக் கூறிக்கொண்டு வந்தன! இப்போது அடிதடியிலும் இறங்கி இருக்கிறது! சீனர்கள் 30 பேர் வரை பலியாம்! ரஷ்யர்கள் 34 பேர் பலியாம்! காயம் பட்டோர் இருதரப்பிலும் ஆயிரக் கணக்கில் என்று தகவல் தரப்படுகிறது! எப்படியோ! யார் மண்ணுக்கு யார் நாயகர்களோ! நாளை— அது தெரியாமலா போகப் போகிறது.

★

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.